மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்
2025 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24 ம் நாள் வெள்ளிக்கிழமை
இடைநிலை மனு எண்.09/2025
இன்
அசல் வழக்கு எண்.57/2021
------

தங்கமாரிமுத்து .. மனுதாரர்/வாதி

/எதிர்/

1. சுப்பம்மாள்
2. ராமர்
3. மாரிச்சாமி
4. ராமலட்சுமி
5. முருகலட்சுமி .. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது இறுதியாக என் முன்பாக 12.09.2025 அன்று விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. எம். சங்கர்ராம், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. A. கணபதிராமன், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை, மனு, அபிடவிட்டு எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

இந்த மனுவானது தாவா அசல் வழக்கில் முதலில் பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிய சான்றாவணங்களை ஆரம்பிப்பதற்கு பிரதிவாதிகளுக்கு உத்தரவிட வேண்டி கட்டளை 18 விதி 1 மற்றும் பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டின் சுருக்கம் –</u>**

**2.1.** மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி. மனுதாரர்/வாதி தாவா

வழக்கு சொத்தை முழுமையாக அமைதியாக அனுபவித்து வருவதை பிரதிவாதிகள் எவ்விதத்திலும் இடைஞ்சல் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வாதி, பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்துள்ளார். தாவா அசல் வழக்கில் பிரதிவாதிகள் வழக்கு சொத்து தங்களுக்கு பூர்வீகச் சொத்து என்றும், அதில் தங்களுக்கு வடபாதியில் பாதி பங்குரிமை உள்ளது என்று கூறி விளம்புகை பரிகாரமும், அதன் தொடர்ச்சியாக இடைஞ்சல் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் பிரதிவாதிகள் எதிர்வழக்குரையுடன் கூடிய எதிர்கோரிருமை தாக்கல் செய்துள்ளனர். தாவா வழக்கில் மனுதாரர் தரப்பில் கடந்த 14.10.2022 ம் தேதி நிரூபண அபிடவிட்டு தாக்கல் செய்து வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் கூடுதல் ஆவணங்கள் 14.11.2022 ம் தேதி குறியீடு செய்யப்பட்டுள்ளது.

2.2. பின்னர் மனுதாரரை குறுக்கு விசாரணை செய்வதற்காக கடந்த 05.12.2022, 14.12.2022, 06.01.2023 ஆகிய தேதிகளில் பிரவிாதிகளுக்கு வாய்தா வழங்கப்பட்டுள்ளது. இருந்தபோதும் மனுதாரரை குறுக்குவிசாரணை செய்யாமல் எதிர்கோருரிமையின் சொத்து விபரத்தினை சீர்திருத்தம் செய்வதற்காக பிரதிவாதிகள் மனு தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி சீர்திருத்த இ.ம.எண்.02/2023 மனு கடந்த 13.02.2023 ம் தேதி அனுமதிக்கப்பட்டும் எதிர்கோருரிமை சொத்து விபரம் சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அதன்பின்னர் பிரதிவாதிகள் மனுதாரரை குறுக்கு விசாரணை செய்வதற்காக 08.09.2023, 25.09.2023, 27.09.2023, 29.09.2023, 11.10.2023 என பல வாய்தாக்கள் வழங்கப்பட்டுள்ளது.

2.3. இதற்கிடையில் பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் மனுதாரர் மீதும் மனுதாரருடைய சகோதர, சகோதரிகள் மீதும் அ.வ.எண்.02/2023 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். அதில் வழக்கு தபசில் சொத்து பொறுத்து என் சகோதர, சகோதரிகள் மனுதாரருக்கு ஆதரவாக கடந்த 24.09.2020 ம் தேதி சாத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ள கிரைய ஆவண

எண்.5436/2020 இல்லா நிலையது என்றும் வாதிகளை கட்டுபடுத்தக் கூடியதில்லை என்று விளம்புகை பரிகாரம் கோரியிருக்கின்றார். அதில் மனுதாரர் த்ரப்பில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த எதிர்வழக்குரையில் பிரதிவாதிகள் சமூகம் நீதிமன்றத்தை தவறாக பயன்படுத்தி அ.வ.எண்.02/2023 வழக்கை இரண்டாவதாக தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், இந்த பிரதிவாதிகள் தங்களுடைய Whole claim–ஐ அ.வ.எண்.57/2021 வழக்கிலேயே கோரியிருக்க வேண்டும் என்றும், அதில் தவறவிட்ட பரிகாரத்தை அ.வ.எண்.02/2023 வழக்கில் கோருகிறார்கள் என்றும், எனவே அ.வ.எண்.02/2023 வழக்கு கட்டளை 2 விதி 2 ஆல் பாதிப்படைந்துள்ளது என்று மனுதாரர் எதிர்வாதம் செய்து வருகின்றார்.

2.4. மேற்படி அ.வ.எண்.02/2023 வழக்கில் வழக்கு மூலமானது அ.வ.எண்.57/2021 வழக்கிலேயே உற்பத்தியாகிவிட்டது. எனவே மேற்சொன்ன அ.வ.எண்.57/2021 வழக்கிலேயே கட்டளை 2 விதி 3 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின்படி அ.வ.எண்.02/2023 வழக்கை தாக்கல் செய்வதற்கு முன் அனுமதி கோரியிருக்க வேண்டும். அவ்வாறு கோராத காரணத்தினால் தவா வழக்கு கட்டளை 2 விதி 2 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் படி பாதிப்படைந்துள்ளது. இந்த விபரத்தை மறைப்பதற்காகவே பிரதிவாதிகள் மேற்படி இரு அசல் வழக்குகளையும் Simultaneous Trial கேட்டு மனு செய்துள்ளார்கள். சமூகம் நீதிமன்றம் மேற்படி மனுவை தள்ளுபடி செய்த காரணத்தினால் இந்த பிரதிவாதிகள் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை மனு செய்து Joint Trial க்கு உத்தரவாகியிருக்கிறது.

2.5. தாவா அசல் வழக்கில் மனுதாரர்/வாதி வழக்கு சொத்தில் சட்டப்படியான அனுபவத்தில் இருந்து வருவதால் மனுதாரர் தாவா அசல் வழக்கில் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் மட்டுமம் கோரியிருக்கின்றார். ஆனால் இந்நிர் பிரதிவாதிகள் வழக்கு சொத்து பூர்வீகச் சொத்து என்றம், அதனால் விளம்புகை பரிகாரமும், அதன் தொடர்ச்சியாக நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரமும் கோரி எதிர்கோருரிமையில்

வாதம் செய்து வருவதால் தாவா வழக்கு சொத்தில் தங்களுக்கு உரிமையுள்ளது என்பதை இந்த பிரதிவாதிகளே முதலில் நிரூபிக்க வேண்டிய கடமை உள்ளது. எனவே தாவா வழக்கில் இந்நிர் பிரதிவாதிகளே சாட்சிய சான்றாவணங்களை ஆரம்பிக்க உத்தரவிட வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். இம்மனு அனுமதிக்காதபட்சம் மனுதாரருக்கு ஏராளமான கஷ்டம் நஷ்டம் ஏற்படக்கூடும். எனவே மனு தாக்கல்.

3. **<u>4ம் எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் –</u>**

**3.1.** மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. இதன்கீழ் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 18 விதி 1ன் படி வழக்கை தாக்கல் செய்த வாதிதான் வழக்கு விசாரணையை துவக்க வேண்டும் என்று குறிப்பிட்டு கூறியுள்ளது. மேலும் இந்த எதிர்மனுதாரர்/பிரதிவாதிகள், மனுதாரர்/வாதியின் வழக்குரையில் கண்ட சங்கதிகளை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே இந்த எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் முதலில் வழக்கு விசாரணையை துவக்க வேண்டுமென்று வாதி கட்டளையிட முடியாது. இதையே மாண்புமிகு உச்ச நீதிமன்றம் J"amy Venkatasurya Prabha & Others Vs Tarini Prasad Nayak & Others" என்ற வழக்கில் குறிப்பிட்டு கூறியுள்ளது.

3.2. ஆகவே, மனுதாரர்/வாதி தான் வழக்கு விசாரணையை துவக்க வேண்டும். வழக்கில் விசாரணையை துவக்காமல் காலம் கடத்த வேண்டுமென்ற நோக்கத்திலும், நீதிமன்ற நடவடிக்கையையும், சட்டத்தையும் தவறாக பயன்படுத்தி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மாண்புமிகு உயர்நீதிமன்றம் அ.வ.எண்.57/2021 மற்றும் அ.வ.எண்.02/2023 ஆகிய இரண்டு வழக்குகளையும் ஒன்றாக விசாரணை செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டு சுமார் ஒரு வருடம்

ஆகியுள்ளது. இதுவரை விசாரணையை துவக்குவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. உயர்நீதிமன்ற உத்தரவை மதிக்காமல் சட்டவிரோதமாக தாக்கல் செய்துள்ள மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

4. மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா?

5. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப் படவில்லை.

6. <u>தீர்வு</u>

6.1. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி. தாவா அசல் வழக்கில் முதலில் பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிய சான்றாவணங்களை ஆரம்பிப்பதற்கு பிரதிவாதிகளுக்கு உத்தரவிட வேண்டி தாக்கல் செய்துள்ள மனுவிற்கு மனுதாரர் கூறும் காரணம் என்னவென்றால், வாதி தாவா வழக்கு சொத்தை முழுமையாக அமைதியாக அனுபவித்து வருவதை பிரதிவாதிகள் எவ்விதத்திலும் இடைஞ்சல் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோரி வாதி, பிரதிவாதிகள் மீது அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதிகள் வழக்கு சொத்து தங்களுக்கு பூர்வீக சொத்து என்றும், அதில் தங்களுக்கு வடபாதியில் பாதி பங்குரிமை உள்ளது என்று கூறி விளம்புகை பரிகாரமும், அதன் தொடர்ச்சியாக நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரமும் கோரி பிரதிவாதிகள் எதிர்வழக்குரையுடன் கூடிற எதிர்கோருரிமை தாக்கல் செய்துள்ளார்கள். வாதி தரப்பில் நிரூபண அபிடவிட்டு தாக்கல் செய்யப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையில் பிரதிவாதிகள், வாதியை குறுக்கு விசாரணை செய்வதற்காக பல வாய்தாக்கள் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சமூகம் நீதிமன்றத்தில் வாதி மற்றும் அவரது சகோதர, சகோதரிகள் மீதும் அ.வ.எண்.02/2023 வழக்கை பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ளனர். எனவே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.2.** எதிர்மனுதாரர்கள் தங்களுடைய ஆட்சேபணையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 18 விதி 1ன் படி வழக்கை தாக்கல் செய்த வாதி தான் வழக்கு விசாரணையை துவக்க வேண்டுமென்று குறிப்பிட்டு கூறியுள்ளது. இந்த எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வழக்கு விசாரணையை துவக்க வேண்டியதில்லை. வழக்கில் விசாரணையை துவக்காமல் காலம் கடத்த வேண்டுமென்றும், நீதிமன்ற நடவடிக்கையையும், சட்டத்தையும் தவறாக பயன்படுத்தி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே அ.வ.எண்.57/2021 மற்றும் அ.வ.எண்.02/2023 ஆகிய இரண்டு வழக்குகளையும் ஒன்றாக விசாரணை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டு சுமார் ஒரு வருடம் ஆகியும், விசாரணையை துவக்குவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. உயர்நீதிமன்ற உத்தரவை மதிக்காமல் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

**6.3.** அசல் வழக்கு பரிசீலிக்கப்பட்டது. இருதரப்பு வாதங்களும், ஆவணங்களும் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர், எதிர்மனுதாரர் கூடுதலான பரிகாரங்கள் அ.வ.எண்.,02/2023 மூலம் வேண்டியுள்ளதால் எதிர்மனுதாரரே விசாரணையை தொடங்க வேண்டுமென்று கோரிய காரணம் ஏற்புடையதாக இல்லை. மேலும் தான் அ.வ.எண்.57/2021–ல் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கேட்டுக் கொண்டுள்ளதாகவும், அ.வ.எண்.02/2023 ல் எதிர்மனுதாரர் சொத்தின் உரிமை குறித்து விளம்புகை பரிகாரம் கேட்டுக் கொண்டுள்ளதால் எதிர்மனுதாரரே இந்த வழக்கை தொடங்க வேண்டும் என்ற காரணமும் ஏற்புடையதாக இல்லை.

6.4. கட்டளை – 18 - உரிமையியல் வழக்கின் கேட்கையும் சாட்சிகளை விசாரித்தலும்

விதி 1. தொடங்கும் உரிமை – வாதிக்குத் தொடங்கும் உரிமையுண்டு, வாதியால் சாட்டுரை செய்யப்பட்ட சங்கதிகளை பிரதிவாதி ஏற்புச் செய்து ஒன்று, சட்டப் பிரச்சினையின் பேரிலோ அல்லது பிரதிவாதியால் சாட்டுரை செய்யப்படும்

ஒருசில கூடுதலான சங்கதிகளின் பேரிலோ வாதி, அவர் கோரும் பரிகாரத்தின் பகுதி எதற்கும் உரிமையுடையவராவார் என்று வாதிட்டாலன்றி அவ்வாறு வாதிடுங்கால் பிரதிவாதிக்கு தொடங்கும் உரிமையுண்டு.

6.5. மேற்படி கட்டளை 18 விதி 1 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் படி பிரதிவாதியானவர், வாதி கூறிய சங்கதிகளை ஏற்றுக்கொள்ளும்பட்சத்தில் மட்டுமே வழக்கின் விசாரணையை தொடங்கும் உரிமையுண்டு. இந்த மனுவை பொறுத்தமட்டில் பிரதிவாதி எவ்வித சங்கதிகளையும் ஏற்றுக்கொள்ளவில்லை. மேற்கண்ட காரணங்களினால் இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. இருதரப்பினர்களும் மாண்புமிகு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டதிற்கிணங்க இவ்வழக்கின் விசாரணையை விரைவாகவும், விவேகமாகவும் நடத்துவதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

7. **<u>இறுதி முடிவு</u>** –

இறுதியாக, இந்த மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24ம் நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

**<u>சாட்சி, சான்றாவணங்கள்</u>**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>**

இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**சாத்தூர்.**
**இ.ம.எண்.09/2025**
**இன்**
**அ.வ.எண்.57/2021**
**உத்தரவு**
**நாள் –24.10.2025.**